# காலாண்டுப் பொதுத் தேர்வு – 2023-2024

## மேல்நிலை முதலாமாண்டு

## பொதுத்தமிழ்

**நேரம் : 3.00 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 90**

### பகுதி-1

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14 x 1 = 14

| வ.எண் | விடை | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | ஆ) பனுவல் | 1 |
| 2. | இ) கபாடபுரங்களை- காலத்தால் | 1 |
| 3. | ஆ) பாரதிதாசன் | 1 |
| 4. | ஈ) ஆறாம் வேற்றுமைத்தொகை | 1 |
| 5. | ஈ) இவை மூன்றும் | 1 |
| 6. | இ) யானை டாக்டர்- குறும் புதினம் | 1 |
| 7. | ஆ) வரை | 1 |
| 8. | ஆ) அண்ணாமலையார் | 1 |
| 9. | ஈ) பகுதி ,விகுதி | 1 |
| 10. | இ) ஊருக்கு உதவுவது | 1 |
| 11. | ஆ) 1857 | 1 |
| 12. | இ) 27. | 1 |
| 13. | இ) 5 3 2 1 | 1 |
| 14. | ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை | 1 |

### பகுதி-II

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 = 6

(இரண்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)

15. நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றி பேசுவது பாயிரமாகும்.

16.

- மரங்கள் வெட்டப்பட்டன.
- மழை பெய்யவில்லை .
- மண்வளம் குன்றியது.
- இயற்கைச் சூழலில் பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டதால், வாழ்வதற்கான சூழல் இல்லாததால் குருவிகள் எங்கெங்கோ தம் இருப்பிடம் தேடி அலைந்தன.

www.Padasalai.Net

17.

- தமிழர் புகழ் கிட்டுமாயின் தம் உயிரினையும் கொடுப்பர்.
- பழி கிட்டுவதானால் உலகம் முழுவதும் பெறுவதாயிருந்தாலும் ஏற்றுக் கொள்ளாதவர் என்று புறநானூறு கூறுகிறது.

18. உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

**பிரிவு -2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 2 = 4**

19. தமிழ் - கோட்டை, கோடு

கன்னடம் - கோட்டே,கோண்டே

தெலுங்கு - கோட்ட

துளு - கோட்டே

தோடா - க்வாட்

(எவையேனும் நான்கு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)

20.

- மன்றம்
- சான்றோர் அவை
- அறங்கூர் அவையம்
- சமணப்பள்ளி
- பௌத்தப்பள்ளி

21.

- "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற் போலவும்".
- மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும்
- நீண்ட நாள் தவமிருந்து புத்திர பாக்கியம் கிட்டினாற்போலவும்

**பிரிவு -3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 x 2 = 14**

22. **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

பிறர் செய்த உதவியை மறக்கக்கூடாது.

நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.

23. **மயங்கொலிச் சொற்களின் பொருள் அறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

அ) நாய் **குரை**க்காமல் போனது பெரிய **குறை** தான்.

ஆ) பொரி **பொரி**க்கும் போது தீப்**பொறி** பட்டுக் காயம் ஏற்பட்டது.

24. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

அ) வைகை - மதுரையில் ஓடுகிறது வைகை ஆறு

வை கை - வை கை என்றவுடன் ஒருவர் கைமீது ஒருவர் வைத்து ஒற்றுமையுடன் இனி வாழ்வதாய் உறுதி பூண்டனர்.

(அல்லது)

www.Padasalai.Net

ஆ) தங்கை - என் தங்கையர் இருவரும் கல்வியில் மட்டுமின்றி விளையாட்டுப் போட்டிகளிலும் பல பரிசுகள் பெற்றுள்ளனர்.

தம் கை - தம் கை தமக்கு உதவி என்பது முதுமொழி.

**(பொருத்தமான ஒரே தொடரில் எழுதியிருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்)**

25. **புதிர்களுக்கான விடைகள்:**

அ) இதழ்

ஆ) மை

26. **கலைச்சொல்லாக்கம் தருக.**

அ) ஆவணம்

ஆ) இயற்கை வேளாண்மை

27. **ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) ஈன்ற - ஈன் + ற் + அ

ஈன் - பகுதி

ற் - இறந்தகால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி

ஆ) வைத்தார் - வை + த் + த் + ஆர்

வை - பகுதி

த் - சந்தி

த் - இறந்த கால இடைநிலை

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**(பிரித்து எழுதி இருப்பின் 1 மதிப்பெண். உறுப்பிலக்கணம் 1 மதிப்பெண்)**

28. **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.**

அ) புகழெனின் -புகழ் +எனின்

உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.

ஆ) பொதுச் சிறப்பு - பொது +சிறப்பு

விதி -இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் க ச த ப மிகும்.

29. **முல்லைத்திணையின் முதற்பொருள்**

நிலம் - காடும் காடு சார்ந்த இடமும்

பொழுது - பெரும் பொழுது -கார்காலம்

சிறுபொழுது -மாலை

30.

- மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் - 22
- உயிரெழுத்துக்கள் -12 ( அ முதல் ஔ வரை)

www.Padasalai.Net

- மெய் எழுத்துக்கள் - 10( க ங ச ஞ த ந ப ம ய வ)

## பகுதி - III

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

31. **நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவன:**
    - நூல் இயல்பு
    - ஆசிரியர் இயல்பு
    - ஆசிரியர் மாணவர்களுக்கு நூலைக் கற்பிக்கும் முறை
    - நூலைக் கேட்கும் மாணவர் இயல்பு.
    - மாணவர்கள் நூலைக் கற்கும் முறை

    ஆகிய ஐந்தும் நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் குறிப்பிடுகிறது.

32. **இடம் சுட்டிப் பொருள் விளக்கம் :**

**இடம்** : இத்தொடர் 'திருமலை முருகன் பள்ளு' என்னும் நூலில், வடகரை நாட்டுப் பள்ளி கூறுவதாய் அமைந்துள்ளது.

**பொருள்** : தாமரைத் தடாகத்தில் உள்ள செந்நிறக் கயல்மீன்கள் அங்குமிங்கும் துள்ளிப் பாயும்.

**விளக்கம்** : தாமரைத் தடாகத்தில் மிகுந்த நீர் நிரம்பி இருப்பதால் அங்கே எண்ணற்ற தாமரைப் பூக்கள் பூத்துள்ளன. மேலும், நீர்வாழ் உயிரினமான செந்நிறம் கொண்ட கயல்மீன்கள் மகிழ்ச்சியுடன் அங்கும் இங்கும் துள்ளிப் பாய்ந்து கண்ணுக்கு விருந்து படைக்கின்றன என்கிறாள், மூத்த பள்ளி.

33. **புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்கள் :**
    - விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா<br>மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று (83)
    - அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது<br>அஞ்சல் அறிவார் தொழில் (428)
    - தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு<br>வேளாண்மை செய்தல் பொருட்டு (212)
    - பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்<br>மண்புக்கு மாய்வது மண் (996)
    - கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது<br>தூக்கங் கடிந்து செயல் (668)
    - வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய<br>வாழ்வாரே வாழா தவர். (240)

**(பொருத்தமான இரண்டு குறட்பாக்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)**

www.Padasalai.Net

34. **"கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது"**

கலைவலாரும் மறையவரும் தம் மனத்தில் எண்ணுகின்ற எப்பொருளும் கிடைக்கும் என்னும் அளவிற்கு மதீனா நகர் பொருள் வளம் பெற்றுத் திகழ்ந்தது.

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

35. **"என்னுயிர் தமிழ் மொழி என்பேன்" என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்று:**

- இளமைப் பருவத்தில் என் நாவை அசைத்ததுமே மழலையெனும் குழலிசையை வளர்த்த மொழி, என்னுயிர் தமிழ் மொழி என்பேன்.
- அறிவெனும் கண்களை அகலத் திறந்து வைத்து, உலகோடு கலந்து உறவாடச் செய்த மொழி.
- மங்காத செல்வமாம் சங்க இலக்கியத்தை வாரி என் முன்னே வைத்திட்ட நன்மொழி.
- கம்பனும் இளங்கோவும், தம்மிரு தோள்களில் தூக்கி எனை வைத்து வளர்த்திடச் செய்த மொழி.
- தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம் என அருள் நூல்கள் ஒளியேற்றி வழிகாட்டச் செய்த மொழி.
- செம்மொழிக்கு உரியதெனும் பதினொரு கோட்பாட்டைத் தன்னகத்தே கொண்டிருக்கும் தன்னிகர் இல்லா மொழி என்னுயிர் தமிழ் மொழி என்பேன்.

**( பொருத்தமான நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)**

36. **மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது:**

- மனித சமூகத்தின் ஆதி நிலம் மலை.
- சேயோன் மேய மைவரை உலகம் - **தொல்காப்பியம்**
- விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ - **திருமுருகாற்றுப்படை**
- மலை நிலத்தைத் தமிழ் இலக்கியம் **'குறிஞ்சி'** என்றே குறிப்பிடுகிறது.
- *கமில் சுவலபில், திராவிடர்களை 'மலை நில மனிதர்கள்' என்கிறார்.
- இந்தியப் பழங்குடியினரின் பெயர்கள் மானுடப் புவிச் சூழலை வெளிப்படுத்துகின்றன.
- பழங்குடியினர் உயரமான இடத்தில் ஓடும் சிற்றாறு, ஓடைகளை ஒட்டிக் குடியிருப்பை அமைத்துள்ளனர்.
- அவை பழங்குடியினரின் மலை சார்ந்த சமூக சமயக் கூறுபாடு சார்ந்த புரிதலைத் தருகின்றன.

**( எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)**

37. **தமிழ் இலக்கியங்களில் கல்வி:**

- **ஆத்திசூடி** - "இளமையில் கல்"
- **நாலடியார்** - "கல்வி அழகே அழகு"
- **திருமந்திரம்** - "துணையாய் வருவது தூயநற் கல்வி"
- **புறநானூறு** -" உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"
- **தொல்காப்பியம்**, கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை "ஓதற்பிரிவு"எனக் குறிப்பிடுகிறது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- அத்துடன் எண்வகை மெய்ப்பாடுகள் பற்றிக் கூறும் போது "கல்வியின் பொருட்டு ஒருவருக்குப் பெருமிதம் தோன்றும்" எனவும் குறிப்பிடுகிறது.

38. **மதிப்புக் கூட்டுப் பொருள்கள்:**

ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாய் ஆக்குவதை மதிப்புக் கூட்டுப் பொருள்கள் என்பர்.

**சான்று :**

- பனை மரத்திலிருந்து கிடைக்கும் பதநீரில் இருந்து பனங்கற்கண்டு கருப்பட்டி
- பசுவின் பாலிலிருந்து கிடைக்கும் தயிர், மோர், வெண்ணெய்.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

39. அ) **வேற்றுமை அணி:**

**அணி விளக்கம்:**

எடுத்துக்கொண்ட இரு பொருள்களின் ஒற்றுமையைக் கூறிப் பின்னர் அவற்றின் வேற்றுமையைக் கூறுவது.

**சான்று:**

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

**அணிப் பொருத்தம் :**

தீயினால் சுட்ட புண்ணும், நாவினால் சுட்ட வடுவும் சுடுதலால் ஒற்றுமையுடையன. புண் ஆறும் . வடு ஆறாது என்பது வேற்றுமை.

(அல்லது)

ஆ) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

**அணி சுட்டல்** –

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி உவமை அணி ஆகும்.

**அணி விளக்கம்:**

கவிஞர் கூறக் கருதிய ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமையணி. இதில் உவமை, உவம உருபு, உவமேயம் ஆகிய மூன்றும் வெளிப்படையாக நிற்கும்.

**பொருத்தம்:**

பெருந்தகையாளனுக்கு மருந்து மரமும், பெருந்தகையாளன் செல்வம் பயன்படுதலுக்கு மருந்து மரம் பயன்படுதலும் உவமைகளாம்.

40. அ) **பொதுவியல் திணை:**

**திணை விளக்கம்:**

வெட்சி முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவாய் உள்ளனவும், அவற்றில் கூறாது ஒழிந்தனவுமாகிய செய்திகளைக் கூறுவது.

www.Padasalai.Net

**சான்று :**

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது என --------
என்ற புறநானூற்றுப் பாடல்.

**பொருத்தம்:** தமக்காக உழைக்காமல் பிறருக்காக பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அதனைத் தனித்து உண்ண மாட்டார்கள். பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவர். புகழ் வரும் எனில் தம் உயிரையும் கொடுப்பார்கள். இத்தகையவர்களால் தான் உலகம் இயங்குகிறது எனப் பொதுவான செய்திகளைக் கூறுவதால் பொதுவியல் திணையாகும்.

(அல்லது)

ஆ) **பொருண்மொழிக் காஞ்சித் துறை:**

**துறை விளக்கம்:**

முனிவரும் அவரைப் போன்றவரும் இம்மை மறுமைகளில் உயிருக்கு உறுதியைத் தருவது இன்னது என்று தாம் தெளிவாய் அறிந்த பொருளைச் சொல்வது.

**சான்று :**

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும்" .....
என்ற புறநானூற்றுப் பாடல்.

**பொருத்தம் :**

தமக்காக உழைக்காமல் பிறருக்காக பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அதனைத் தனித்து உண்ண மாட்டார்கள். பிறர் அஞ்சுவதற்கு தாமும் அஞ்சுவர். புகழ் வரும் எனில் தம் உயிரையும் கொடுப்பார்கள். இத்தகையவர்களால் தான் உலகம் இயங்குகிறது எனப் பொதுவான செய்திகளைக் கூறுவதால் இது பொருண்மொழிக் காஞ்சித் துறையாகும்

www.Padasalai.Net

41. **இலக்கிய நயம் பாராட்டுக:**

**மையக்கருத்து:**

வேற்றுமைகளை மறந்து அனைவரும் ஒரு குடும்பமாய் வாழ்ந்து ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம் என்று வலியுறுத்துகிறார்.

**மோனை :**

பிரிவுகள் - பேதமை

ஒருதனி - ஒற்றுமை

**எதுகை :**

பிரிவுகள் - ஒருதனி

**இயைபு :**

விளைந்தனவே - விரிந்தனவே

போயொழிக - நலமுறுக

வாழ்ந்திடுவோம் - செய்திடுவோம்

**முரண்:**

இன்னல் போயொழிக × நலமுறுக

பிரிவுகள் × ஒற்றுமை

**அணிநயம்:** இயல்பு நவிற்சி அணி

**சந்தநயம் :** சிந்துப்பா

**( மையக்கருத்துடன் எவையேனும் மூன்று ஏற்புடைய நயங்கள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)**

42. **பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்பு படுத்தி எழுதுக.**

அ ) சிறுதுளி பெருவெள்ளம்

(அல்லது)

யானைக்கும் அடி சறுக்கும்

ஆ) பழமொழி விளக்கம் (1)

வாழ்க்கை நிகழ்வு (கதை) (3)

43. **தமிழாக்கம் தருக:**

அ ) வாளின் முனையை விட பேனாவின் முனை கூர்மையானது.

(அல்லது)

வாளின் வலியது எழுதுகோல்

ஆ ) ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.

இ ) வேலை செய்யும்போது வேலை செய் : விளையாடும் போது விளையாடு.

ஈ ) அறிவே உலகை ஆளுகிறது.

43. **செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா :**

1. ஆபிரகாம் பண்டிதர்
2. புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம்
3. சங்கீத வித்யா மகாஜன சங்கம்
4. கருணாமிர்த சாகரம்

## பகுதி- IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 x 6 = 18

44. **அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை நாடு:**

- வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள், 'இந்தளம்' என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும்.
- வண்டின் இசை கேட்டு வாய்க்காலில் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வாலை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும்.

www.Padasalai.Net

- தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும். முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும். (3)
- மின்னலையொத்த பெண்கள் ,பெய் என்றால் மழை பெய்யும்.
- உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும்.
- இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற திருமலைச் சேவகன் வீற்றிருக்கிறார்.

**திருமலை முருகன் பள்ளு கூறும் தென்கரை நாடு:**

- தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச்செல்லும்.
- இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகைகளில் அகில்புகையின் நறுமணம் பரவிக்கொண்டே இருக்கும்.
- இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.
- செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாமல் காவல் காப்பர் .
- இளைய பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர். (3)
- இங்குள்ள குளங்களில் அலைகள் முத்துகளை ஏந்திவரும். அவ்வலைகள் கரைகளில் மோதும் பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும்.
- இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கிறார்.

(அல்லது)

**ஆ. அடக்கமுடைமை:**

- நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியது . (2)
- ஒருவர் எதைக் காக்கா விட்டாலும் நாவைக் காக்க வேண்டும் .அவ்வாறு காக்கா விட்டால் சொற்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர். (2)
- தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் ஆறிவிடும்; நாவினால் சுட்ட புண்ணால்உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது. (2)

**(திருக்குறளில் அடக்கமுடைமை அதிகாரத்தில் பிற கருத்துகள் எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்.)**

45. **அ) மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் உணரும் விதம் :**

- தனது எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிப்பது மொழி. மொழி பேச்சு மொழி, எழுத்து மொழி என இரு வகைப்படும்.
- பேச்சு மொழி திரவ நிலையில் நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்கிறது.
- உடம்பின் ஒரு பகுதியாக இருக்கும் தொண்டையிலிருந்து எழும் சொற்கள், குரல் ஏற்ற இறக்கம், உச்சரிப்பு வேகம், நிதானம், திருப்பி சொல்லுதல், மௌனம் ஆகியவற்றால் வடிவம் கொடுத்து வெளிப்படுகின்றன.
- எழுத்து மொழி உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலை கொண்டது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- எழுத்து மொழியில் மனிதனின் கை மட்டும்தான் வேலை செய்கிறது. எதிராளி கிடையாது. பேச்சு மொழி நேரடி மொழி. எதிராளியிடம் நேருக்கு நேராய் வெளிப்படுத்துவது.
- பேச்சு மொழியில் பழமை தட்டாது. உணர்வுகளுக்கு குறையில்லை. எப்போதும் உயிர்ப்புடன் மாறிக்கொண்டு இருப்பதைப் பேச்சு மொழியில் உணரலாம். பேச்சு மொழியே வலிமை வாய்ந்தது.

(அல்லது)

ஆ) **பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபு வழிக் கல்வி ஆகிய முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்கள் :**

**பௌத்தக் கல்வி:**

- பௌத்தப் பள்ளிகள் போன்ற அமைப்புகள் சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் கற்பித்தல் பணியை தமிழகத்தில் செய்து வந்துள்ளன. (2)
- தமிழர்கள் இன்று பரவலாக ஏற்றுக் கொண்டிருக்கும் பட்டிமண்டபம் என்ற கலை வடிவம் சமயத்துறையிலிருந்து தோன்றியது.
- காஞ்சிபுரத்தில் உள்ள பௌத்தப் பல்கலைக்கழகத்திற்கு வந்த சீனப்பயணி யுவான்சுவாங் அங்கு தங்கிச் சிறப்புரை ஆற்றியிருக்கிறார்.

**சமணக் கல்வி:**

- சமண சமயத்தைச் சார்ந்த திகம்பர துறவிகள் மலை குகைகளைத் தங்கள் தங்குமிடமாய்க் (2) கொண்டனர். அங்கு, கற்பதற்கு முன்வந்த மாணவர்களுக்குத் துறவியர் கல்வியையும், சமயக் கருத்துகளையும் போதித்தனர்.
- சமணர்களின் படுக்கைகளின் மீது அமர்ந்து மாணவர் கற்றதால் 'பள்ளிக்கூடம்' என வழங்கப்பட்டது.
- வந்தவாசிக்கு அருகிலுள்ள வேடல் என்ற ஊரில் இருந்த சமணப்பள்ளியில் பெண் சமண ஆசிரியர் இருந்தார்.

**மரபு வழிக் கல்வி:**

- மரபு வழிக்கல்வி முறைகளுள் ஒன்று: குருகுலக் கல்வி முறை.
- இது செய்து கற்றல், வாழ்ந்து கற்றல் ,எளிமையாய் வாழ்தல் என்னும் அடிப்படையில் அமைந்தது .
- இம்முறை போதனா முறையைத் தாண்டி வாழ்வியலைக் கட்டமைப்பதில் உறுதியானதாய் (2) விளங்கியது.
- மற்றொரு மரபு வழிக் கல்வி முறை, திண்ணைப் பள்ளிகள் ஆகும்.
- கிராமந்தோறும் திண்ணைப் பள்ளி இருந்தது.
- திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்களைக் 'கணக்காயர்கள்' என்று வழங்கினர்.

46. **அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு:**

யானை டாக்டர்- மனிதனின் கீழ்மைகள் -இயற்கை வளங்களை அழித்தல்- உயிரைப் பறித்து விடும்- அற்புதமான படைப்பு- யானை புத்துணர்வுத் திட்டம் -அதிக ஞாபக சக்தி -இயற்கையைக் காப்போம்! வன உயிரினங்களைப் பாதுகாப்போம்! (6)

**(கதை வடிவில் எழுதி இருப்பின் பாதி மதிப்பெண் வழங்கலாம்.)**

(அல்லது)

ஆ) பிம்பம் -கதை

www.Padasalai.Net

- முன்னுரை (1)
- உட்தலைப்புகள் (4)
- முடிவுரை (1)

## பகுதி - V

**47. அடி பிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **(4 + 2 = 6)**

அ) **குறுந்தொகை**

அம்ம வாழி தோழி நம்மூர்ப் (4)
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்று பெரிது என்னும் ஆங்கண தவையே.

-வெள்ளிவீதியார்

ஆ) **திருக்குறள்**

**நன்று - என முடியும் குறள்**

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் (2)
தோன்றலின் தோன்றாமை நன்று.

www.Padasalai.Net